

# இவர்கள் சந்திப்பில்...



## (ஒரு கற்பனை)

**("நாடாளுமன்றத்தில் தனது அலுவலக அறையில் உள்துறை அமைச்சர் அமித்ஷா கடுப்புடன் அமர்ந்திருக்கிறார். அப்போது நிதி அமைச்சர் நிர்மலா வழக்கமான மிடுக்குடன் நுழைகிறார்")**

**நிர்மலா சீத்தாராமன்** : நமஸ்தே ஜி... அவசரமா வரச் சொன்னீங்களாமே; ஏன்?

**அமித்ஷா** : ஏம்மா... உங்களுக்கெல்லாம் அரசியல் அறிவு - தெளிவு - விளைவு எதுவுமே கிடையாதா?

**நிர்மலா சீத்தாராமன்** : (திடுக்கிட்டு) என்ன.. ஜி... இப்படி திடீர்னு கேட்டுட்டீங்க... இவைகளெல்லாம் இல்லாத என்னையா நிதியமைச்சர் ஆக்கியிருக்கிறீர்கள்!



**அமித்ஷா** : ஏதோ புத்திசாலித்தனமா கேள்வி கேட்டதா நெனச்சு என் கோபத்தை கிளறாதேம்மா! யாருக்கிட்ட பேசறோம்னு தெரியாம வாய் நீளத்தைக் காட்டக் கூடாது.

**நிர்மலா சீத்தாராமன்** : மன்னிச்சிக்குங்க ஜி.. பழக்க தோசத்தில வார்த்தைகளை வரம்பு மீறி கொட்டிட்டேன்!

**அமித்ஷா : தமிழ்நாட்டிலே பா.ஜ.க. வளராததற்குக் காரணம் என்னன்னு இப்பதான் புரியுது; எப்ப என்ன பேசுறதுன்னு தெரியாம இப்படி தத்துபித்துன்னு பேசினா எப்படி வளரும்...**

**நிர்மலா சீத்தாராமன்** : உண்மைதான் ஜி... இப்ப தமிழ்நாட்டில் பா.ஜ.க. தலைவரா வர்ரவங்க எல்லாமே இப்படித்தான் ஏதாவது வாயைத் திறந்து மாட்டிக்கிறாங்க...

**அமித்ஷா** : நான் உன்னையும் சேர்த்து தாம்மா சொல்றேன்... மீடியா வெளிச்சத்துக்காக மைக் கிடைச்சா ஏதாவது 'கன்னா பின்னா'ன்னு கருத்துச் சொல்லிடுறீங்க...

**நிர்மலா சீத்தாராமன்** : ஆமாம் ஜி.... இந்த தமிழிசை சுத்த மோசம்; அதனால தான் நீங்க ஹைதராபாத்துல கூப்பிட்டு எச்சரிச்சிங்க...

**அமித்ஷா** : தமிழிசையை குறை சொல்ற நம்ம யோக்யதை என்னென்னு நீ யோசிச்சியாம்மா...

**நிர்மலா சீத்தாராமன்** : நான் என்ன செய்தேன் ஜி....

**அமித்ஷா** : தமிழ்நாட்டிலே கள்ளக்குறிச்சியிலே நடந்த விஷச்சாராய சாவுக்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டும்... மது விலக்குத் துறை அமைச்சர் பதவி விலக வேண்டும், முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என்றெல்லாம் பேட்டி கொடுக்கலையா?

**நிர்மலா சீத்தாராமன்** : அதிலென்ன ஜி தப்பு! அண்ணாமலை, எடப்பாடி எல்லாம் கேட்டதைத் தானே நானும் என் பங்கிற்குச் சொன்னேன்..

**அமித்ஷா** : அவங்க எல்லாம் ஏனோ தானாக்கள்.. இதுபோல பொறுப்பின்றி உளறுவதையே அரசியல் என்று எண்ணி அரசியல் நடத்துபவர்கள்! பின் விளைவுகளை சிந்திக்காது பிதற்றுபவர்கள்! ஆனால் இந்த நாட்டின் நிதியமைச்சர் பொறுப்பில் இருக்கும் உன் போன்றோர் பொறுப்பற்று பேசலாமா? ... நாளை நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை எழுமல்லவா?

**நிர்மலா சீத்தாராமன்** : எழுந்தால் என்ன, பதில் சொல்லிவிட்டுப் போகிறோம்..

**அமித்ஷா** : அதனால்தான் சொன்னேன் அரசியல் விளைவுகளைத் தெரியாமல் பேசக் கூடாது என்று! நாடாளுமன்றத்தில் முன்பு போல எல்லாம் "எடுத்தேன் கவிழ்த்தேன்" என்று பேச முடியாது; எதிர்க்கட்சிகளும் நமக்கு இணையான பலத்தோடு உள்ளது!

**நிர்மலா சீத்தாராமன்** : உண்மைதான் ஜி.. நான் என்ன அப்படி அறிவு கெட்டத்தனமாகக் கூறி விட்டேன்.

**அமித்ஷா** : "தமிழ்நாட்டில் நடந்து விட்ட விஷச்சாராய சாவு குறித்து சி.பி.ஐ. விசாரணை வேண்டும். முதலமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். சம்மந்தப்பட்ட துறை அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்" என்றெல்லாம் பேட்டி தந்துள்ளாயே..

**நிர்மலா சீத்தாராமன்** : ஆமாம்; அதுதானே அரசியல்; அதிலே என்ன தவறு!

**அமித்ஷா : என்ன தவறா? என் வாயிலே ஏதேதோ வருகிறது.. கோபத்தைக் கிளறாதே... நீ இப்படி பேசினால் குஜராத்தில் 136 பேர் விஷச் சாராயத்துக்குப் பலியான சம்பவத்தை சுட்டிக்காட்டி பேச மாட்டார்களா?**

**நிர்மலா சீத்தாராமன்** : அது எப்போதோ நடந்த சம்பவம் ; யாருக்கு நினைவிருக்கப் போகிறது?

**அமித்ஷா : இப்படித்தான் அரைகுறைத் தெளிவோடு பேசி - நீங்கள் மாட்டிக் கொள்வது மட்டுமின்றி - பிரதமரையும் - என்னையும் மாட்டி விட்டுவிடுகிறீர்கள்; பிரதமர் செய்தியாளரையே சந்திப்பதில்லை; நாடாளுமன்றத்திலும் வாய் திறப்பதில்லை.**

**நிர்மலா சீத்தாராமன்** : என்ன சொல்ல வருகிறீர்கள் ஜி...

**அமித்ஷா : குஜராத்தில் 136 பேர் விஷச் சாராயம் குடித்து மறைந்த போது யார் முதலமைச்சர்; யார் மது விலக்குத் துறை அமைச்சர் என்ற தெளிவான அறிவாவது உனக்கு இருக்கிறதா?**

**நிர்மலா சீத்தாராமன்** : என்ன சொல்ல வருகிறீர்கள் ஜி...

**அமித்ஷா** : இன்னமும் எதுவும் புரியாதது போல பேசுகிறாயே!

**நிர்மலா சீத்தாராமன்** : உண்மையிலேயே புரியவில்லை ஜி...

**அமித்ஷா : புரியவில்லையா? இப்போதாவது தெரிந்துகொள்!**

**அந்த 136 பேர் சாவின் போது குஜராத் முதலமைச்சராக இருந்தவர் இன்றைய பிரதமர் மோடி! உள்துறை மற்றும் மது விலக்குத் துறை அமைச்சராக இருந்தது சாட்சாத் நானேதான்!**

அன்றைய தினம் அந்த கள்ளச்சாராய சாவுகளுக்கு அன்றைய முதலமைச்சர், இன்றைய பிரதமர் மோடி பொறுப்பேற்கவில்லை; உள்துறை மற்றும் மதுவிலக்குத் துறை அமைச்சரான நான் பதவி விலகவில்லை; சி.பி.ஐ. விசாரணையும் நடத்தவில்லை.

**நிர்மலா சீத்தாராமன்** : மன்னிக்கணும் ஜி.... இந்த வரலாறெல்லாம் எனக்கு முழுமையாகத் தெரியவில்லை.

**அமித்ஷா** : உன் வரலாற்று அறிவு பற்றி தமிழ்நாடே நன்கு அறியும்.

**நிர்மலா சீத்தாராமன்** : என்ன சொல்கிறீர்கள் ஜி....



**சிலந்தி**

**அமித்ஷா : 1959-ல் பிறந்த நீ, தி.மு.கழகம் நடத்திய இந்தி எதிர்ப்பு வன்முறை போராட்டத்தின் பின்னணியில் தன் போன்றோரால் இந்தியை ஆழமாக கற்க முடியாது போய்விட்டது என்று கூறிவிட்டு மாட்டிக் கொண்டது நினைவில்லையா? 1959-ல் பிறந்த உன்னால் 1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது எப்படி கல்லூரியில் படித்திருக்க முடியும் என்ற தெளிவின்றி பேசி மாட்டிக் கொண்டது மறந்து விட்டதா?**


**நிர்மலா சீத்தாராமன்** : ஜி.... அது வந்து... வந்து

**அமித்ஷா** : என்ன... வந்து நொந்து... பேட்டி தரும் முன்பே எதையும் சிந்தித்து பேச வேண்டும்; இல்லையேல் நமது மோடி ஜி போல பேட்டியை தவிர்க்க வேண்டும்.

**நிர்மலா சீத்தாராமன்** : உண்மைதான்... ஜி! சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று சொன்னது தி.மு.க.வை மிரட்டிட; நம்ம ஆட்சியிலே அதுவும் மோடி ஜியும், நீங்களும் முதல்வராகவும், மதுவிலக்குத் துறை அமைச்சராகவும் இருந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் எல்லாம் எனக்கு நினைவில்லை... இருந்திருந்தால் வாயைத் திறந்திருக்கவே மாட்டேன்.

**அமித்ஷா** : கடந்த 2016 முதல் 2020 வரை நமது நாட்டில் நடந்த விஷச்சாராய மற்றும் கள்ளச் சாராய சாவுகளின் பட்டியலைப் பார்த்ததில்லையா... நீ!

**நிர்மலா சீத்தாராமன்** : கவனிக்கவில்லை ஜி...



Annexure

L.S.US.Q.NO.458 FOR 19.07.2022

State/UT-wise Deaths due to consumption of Illicit/Spurious Liquor during 2016-2020

| SL | State/UT | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|
| 1 | Andhra Pradesh | 23 | 183 | 42 | 27 | 18 |
| 2 | Arunachal Pradesh | 0 | 1 | 0 | 0 | 0 |
| 3 | Assam | 1 | 4 | 2 | 98 | 0 |
| 4 | Bihar | 6 | 0 | 0 | 9 | 6 |
| 5 | Chhattisgarh | 142 | 104 | 77 | 115 | 67 |
| 6 | Goa | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | Gujarat | 25 | 11 | 1 | 3 | 10 |
| 8 | Haryana | 169 | 135 | 162 | 0 | 10 |
| 9 | Himachal Pradesh | 25 | 43 | 43 | 56 | 43 |
| 10 | Jharkhand | 41 | 76 | 56 | 115 | 139 |
| 11 | Karnataka | 68 | 256 | 218 | 268 | 99 |
| 12 | Kerala | 3 | 4 | 11 | 7 | 3 |
| 13 | Madhya Pradesh | 184 | 216 | 410 | 190 | 214 |
| 14 | Maharashtra | 0 | 0 | 0 | 0 | 0 |
| 15 | Manipur | 0 | 0 | 0 | 1 | 0 |
| 16 | Meghalaya | 13 | 7 | 4 | 3 | 15 |
| 17 | Mizoram | 10 | 7 | 2 | 0 | 1 |
| 18 | Nagaland | 0 | 1 | 0 | 0 | 0 |
| 19 | Odisha | 0 | 4 | 6 | 0 | 18 |
| 20 | Punjab | 72 | 170 | 159 | 191 | 133 |
| 21 | Rajasthan | 45 | 51 | 64 | 88 | 31 |
| 22 | Sikkim | 0 | 4 | 2 | 3 | 8 |
| 23 | Tamil Nadu | 0 | 0 | 0 | 0 | 20 |
| 24 | Telangana | 54 | 0 | 0 | 0 | 0 |
| 25 | Tripura | 5 | 13 | 3 | 2 | 3 |
| 26 | Uttar Pradesh | 68 | 54 | 78 | 41 | 50 |
| 27 | Uttarakhand | 7 | 2 | 0 | 47 | 5 |
| 28 | West Bengal | 0 | 8 | 12 | 0 | 0 |
| | TOTAL STATE(S) | 961 | 1354 | 1352 | 1264 | 893 |
| 29 | A & N Islands | 18 | 0 | 0 | 0 | 20 |
| 30 | Chandigarh | 0 | 0 | 0 | 5 | 4 |
| 31 | D&N Haveli and Daman&Diu @ + | 4 | 0 | 5 | 3 | 2 |
| 32 | Delhi UT | 7 | 31 | 8 | 22 | 26 |
| 33 | Jammu & Kashmir @ * | 9 | 8 | 0 | 2 | 2 |
| 34 | Ladakh @ | | | | | 0 |
| 35 | Lakshadweep | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | Puducherry | 55 | 117 | 0 | 0 | 0 |
| | TOTAL UT(S) | 93 | 156 | 13 | 32 | 54 |
| | TOTAL (ALL INDIA) | 1054 | 1510 | 1365 | 1296 | 947 |

As per data provided by states/UTs.
'+' Combined data of erstwhile D & N HAVELI AND DAMAN & DIU UT during 2016-2019
'*' Data of erstwhile JAMMU & KASHMIR State including LADAKH during 2016-2019
'@' Data of newly created Union territory

**அமித்ஷா : (கையிலிருந்த ஒரு பேப்பரை எடுத்துத் தருகிறார்) பார்... இது லோக் சபாவில் உள்துறை அமைச்சகத்தின் சார்பில் தந்த தகவல்கள்! இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் இந்த 5 ஆண்டு களில் நடந்த கள்ள மற்றும் விஷச் சாராய சாவுகளின் எண்ணிக்கை மட்டும் 6177....**

**நிர்மலா சீத்தாராமன்** : உண்மைதான் ஜி! இது மறந்துவிட்டது... இதற்கும் நான் கேட்ட சி.பி.ஐ. விசாரணைக்கும் என்ன சம்பந்தம்...

**அமித்ஷா** : அதனால்தான் ஆரம்பத்திலேயே சொன்னேன்... அரசியல் தெளிவு இல்லை என்று!

**நிர்மலா சீத்தாராமன்** : அரசியல் தெளிவுக்கும் இதற்கும் என்ன தொடர்பு?

**அமித்ஷா : கடந்த 5 ஆண்டுகளில் இந்தப் பட்டியலில் உள்ளபடி பல மாநிலங்களில் நூற்றுக்கணக்கானோர் விஷச்சாராயத்துக்கு பலி ஆகியிருக்கிறார்கள். பெரும்பாலான மாநிலங்கள் பா.ஜ.க.வின் கூட்டணி ஆட்சி நடைபெற்றுள்ளது! அந்த மாநிலங்களில் எல்லாம் எங்காவது இந்த சாவுகள் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடந்துள்ளதா? இதற்கு அந்த மாநில முதலமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ளனரா? சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனரா?**

**நிர்மலா சீத்தாராமன்** : (மவுனமாக நிற்கிறார்)

**அமித்ஷா** : நாடாளுமன்றத்தில் நாளை இதை எல்லாம் குறிப்பிட்டு உறுப்பினர்கள் பேசுவார்களே; என்ற அறிவு ஒரு பொறுப்புள்ள அமைச்சருக்கு இருக்க வேண்டாமா? அண்ணாமலை, தமிழிசை போன்று அறிவு கெட்டத்தனமாக பேசுவதை இனிமேலாவது நிறுத்து... (கோபமாக தனது ஆட்காட்டி விரலை நீட்டி ஏதோ கூறத் தொடங்குகிறார்)

**நிர்மலா சீத்தாராமன்** : அய்யய்யோ.... கைவிரலை உயர்த்தாதீங்க ஜி..... யாராவது வீடியோ எடுத்துப்போட்டு தமிழிசை போல என்னையும் அசிங்கப்படுத்திடப் போறாங்க....

**அமித்ஷா** : அந்த பயம் இருக்கட்டும்... ஜாக்கிரதை!

**(நிர்மலா சீத்தாராமன் முகம் கறுத்து குனிந்த தலையுடன் வந்த போது - வெளியே சிலர் அமித்ஷாவுக்காக காத்திருப்பதைப் பார்த்த உடன் தலை நிமிர்த்தி உள்ளே ஏதும் நடக்காதது போல காட்டிக் கொள்ள விறைப்பாக நடந்து செல்கிறார்.)**